**மேட்டூர் சார்பு நீதிமன்றம்**

| OS. No.280/2017 | Date : 15.10.2024 | DW1 |
|---|---|---|
| Name: சந்துரு (எ) முனுசாமி | த/பெ. முனியப்ப கவுண்டர் | |

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

வாதிகள் இருவரும் எனது மூத்த சகோதரர்கள் என்றால் சரிதான். அவர்கள் எங்கள் தகப்பனாரின் முதல் மனைவியின் மகன்கள் என்றால் சரிதான். 1986 ம் வருடத்தில் ஏற்பட்ட பாகப்பிரிவினையில் எங்கள் தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட பாக சொத்தை பொறுத்துதான் இந்த வழக்கு என்றால் சரிதான். மீதி சொத்துக்களான எங்களுக்கு வந்த சொத்துக்களை பற்றியோ வாதிகளுக்கு வந்த சொத்துக்கள் பற்றியோ எங்களுக்குள் எந்த பிரச்சினையும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தான சர்வே எண்.230/3B யில் 2 ஏக்கர் 3 செண்ட் சொத்து எனது தகப்பனாருக்கு பாகப்பிரிவினையில் வந்தது என்றால் சரிதான். எங்களது தகப்பனார் 19.12.2005 ம் தேதி இறந்துவிட்டார். எங்களது தகப்பனார் இறந்தபிறகு அவரை தங்கப்பன் (எ) முனியப்பனுக்கு ஒதுக்கப்பட்ட பாக சொத்தில் அடக்கம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு பாத்தியமான சர்வே எண்.223 சொத்தில் அடக்கம் செய்யப்பட்டது. நான் சொல்வது தவறு என்றும் எங்களது தகப்பனாரை எனது காட்டில் அடக்கம் செய்யக்கூடாது என்று நான் பிரச்சினை செய்ததால் வாதிக்கு பாத்தியமான சர்வே எண்.238/1B யில் உள்ள நிலத்தில் அடக்கம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 1986 ம் வருடத்தில் பாகப்பிரிவினை ஏற்பட்ட பிறகும் எங்களது குடும்பத்தில் ஒற்றுமையாகதான் இருந்தோம் என்றால் சரிதான். வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்தபோது தாவா சொத்தை பொறுத்து எங்களது தகப்பனார் எந்தவித ஏற்பாடும் செய்து வைக்காமல் இறந்துவிட்டார் என்றும், அதனால் தாவா சொத்தில் பாகம் வேண்டும் என்று கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் 1999 ம் வருடத்தில் எனது தாயார் சின்னத்தாயம்மாள் பெயரில் உயில் எழுதி வைத்துள்ளார். எங்களது தகப்பனார் உயில் எழுதி வைத்ததாக சொல்லப்படும் விவரம் இந்த வழக்கில் 2018 ம் வருடத்தில் எங்கள் தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்த போதுதான் வாதிகளுக்கு தெரியும் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தை எழுதி வைத்த போதே அனைவருக்கும் தெரியும். நான் சொல்வது தவறு என்றும் உண்மையிலேயே உயில் எழுதி இருந்தால் வாதிகள் இவ்வழக்கைதாக்கல் செய்திருக்க மாட்டார்கள் என்றும், பின்னிட்டு நானும் எனது தாயாரும் சேர்ந்து எங்களது தகப்பனாரை வற்புறுத்தி மேற்படி உயில் ஆவணத்தை ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரியல்ல. இதுநாள் வரை உயில் ஆவணத்தை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். மேற்படி உயில் ஆவணத்தில் சொத்து குறித்து என்ன விவரம் எழுதப்பட்டுள்ளது

என்றால் சொத்து எனது தாயாருக்கு பாத்தியப்பட்டு அவரது இறப்பிற்கு பிறகு எனக்கு பாத்தியப்படுத்தி எழுதப்பட்டுள்ளது. மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணமான உயில் ஆவணத்தில் எங்களது குடும்பத்தை சேர்ந்த நபர்கள் யாரும் சாட்சிகள் இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்திருப்பது எனது சகோதரியும் 9 வது பிரதிவாதியுமான ரத்தினம்மாளின் கணவர் ராமமூர்த்தி ஆவார். மற்றொரு சாட்சி மேற்படி ராமமூர்த்தியின் தகப்பனார் குள்ளுசாமி ஆவார். மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் இன்னாரென்று நிரூபித்தவர் என்று குறிப்பிட்டுள்ள இடத்திலும் மேற்படி இருவர்தான் சாட்சி கையொப்பம் இட்டுள்ளார்கள் என்றும் உள்ளூரை சேர்ந்த நபர்களோ அல்லது எங்கள் குடும்பத்தை சேர்ந்த உறுப்பினர்களோ யாரும் சாட்சி கையொப்பம் இடவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரத்தில் சர்வே எண்.230/3B யில் B என்ற எழுத்து பேனாவால் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணம் 15.07.1999 ம் தேதியன்று தயாரிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் அன்றைய தினமே பதிவு செய்யப்பட்டது. நான் சொல்வது தவறு என்றும் மேற்படி ஆவணம் தயாரிக்கப்பட்டு நான்கு நாட்கள் கழித்து 19.07.1999 ம் தேதியன்று தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாட்சியிடம் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை காண்பித்து மேற்படி ஆவணம் 19.07.1999 ம் தேதியன்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்று கேட்டபோதும் ஆவணத்தின் 2 வது பக்கத்தை பார்த்து 15.07.1999 தேதியன்றுதான் பதிவுசெய்யப்பட்டதாக சாட்சி கூறுகிறார்.

**வாதியின் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

ஒம்/–முனுசாமி

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–எல்.கமலகண்ணன்,
சார்பு நீதிபதி,
மேட்டுர்.